

தேன் கூடு

விஜயரங்கம்

விலை அணா இரண்டு.

தேன் கூடு

விஜயரங்கம்

விலை அணா இரண்டு

கமலா பிரசுராலயம்

சென்னை — மதுரை

சிறுவர் மலர் 1.

'தேன் கூடு' சிறுவர்களின்
பொழுது போக்குக்காகவே
எழுதப்பட்டது.
இது, சிறுவர்களுக்குப்
பிடித்திருக்கிறதா?
என்பதைச் சிறுவர்களே
சொல்லவேண்டும்
இதுபோன்ற சிறு சிறு
புத்தகங்கள்
இன்னும் படங்களுடன்
அழகாக
வெளியிட வேண்டு
மென்பது
எங்கள் ஆசை!

கமலா பிரசுராலயம்
சென்னை. மதுரை.

தேன் கூடு

ஈக்கள் தேன் சேகரித்தல்

தேனிக்கள் ஒன்று கூடி
திசையெலாம் சென்று தேடி
தேன் கொண்டு வந்து சேர்க்கும்!
தாமரை பூத்திருந்தால்
தேனிக்கள் அங்குச் செல்லும்!
சிறு ரோஜா பூவில் உள்ள
தேனையும் சேகரிக்கும்;
சிறுவர்போல் சுறுசுறுப்பாய்!

மாம்பூவை நாடிச் சென்று
மணமுள்ள தேன் எடுக்கும்!
நாம், பூவை கசக்கி விட்டால்
தேனீக்கள் நம்மைத் திட்டும்!
சோம்பலுங் கொண்டிடாமல்
துன்பமும் எண்ணிடாமல்
"ஙம்ங்" என்றே பாட்டுப் பாடி
இளந்தென்றலோடு உலாவும்!

எங்கள் தோட்டத்தில் தேனீ
இருக்கும்! அப்பால் எங்கேயோ
வெங்காயம் பூத்திருக்கும்;
வேகமாய் அங்கே ஓடும்!
தங்காது ஓர் இடத்தில்!
தலைசாய்த்துத் தூங்கிடாது!
எங்குந்தான் இருக்குந் தேனீ!
ஏன் தம்பி, பார்த்ததில்லை?

இப்படித் திரிந்து அலைந்து
சேர்த்திட்ட தேனை எல்லாம்
அப்படியே காப்பாற்றி
அழகாக, மெழுகினாலே
கப்பல்போல் கூடுகட்டும்!
கணக்கிலா சன்னல் வைக்கும்!
கைபட்டால் அந்தக் கூட்டில்
உடனே, தேன்கசிந்து சொட்டும்!

தேனீக்கள், சின்னதொரு மரக்கிளையில்
கூடு கட்டின.

சின்னதோர் கிளையில் தொங்கும்
"தேன்கூடு" பாராய் தம்பி!
என்னதான் அருமை! ஆ! ஆ!!
ஈக்கள் எக்களிப்பும் நீபார்!
கன்னங் கறுத்த ஓர் ஆள்
கையில் தீப்பந்தம் ஏந்தி
முன்னும் பின்னும் பார்த்தே
தேன்கூட்டை முறைக்கிறானே!

தேன் எடுப்பவன் மரத்தின்மேல் ஏறுகிறன்.

மரத்தின்மேல் ஏறிவிட்டான்!
மடியுதே ஈக்கள் ஐயோ!
நெருப்பினைக் காட்டுகின்றுன்,
நெருங்க முடியாமல் ஈக்கள்
வருந்தியே அழுது, கண்ணீர்
வடித்தன கூட்டைப் பார்த்து!
முரடனுல் தேனின் கூடு
முழுதுமே அழிந்து போச்சு!

தேன் எடுப்பவன் தேன்கூட்டை அழித்துத்,
தேனைஎல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

பல நாட்கள் பாடுபட்டுப்
பசியோடு உழைத்துழைத்து
நிலவுபோல் கூடுகட்டிக்
காத்தன நாளும் ஈக்கள்!
சில நொடிக்குள் அக்கூட்டைச்
சிதைத்தானே முரடன் ஐயோ!
கலங்கின ஈக்கள் எல்லாம்!
கவர்ந்தானே தேனை எல்லாம்!

இப்படித்தான், முதலாளி, உழைப்பவனின்
பொருளைத் தட்டிப் பிடுங்கிக்கொள்வான்.
ஆகையால், உழைப்பவர்களுக்குத்தான்
எந்தப் பொருளும் சொந்தம் என்று
நீ சொல்க!

இதுபோல்தான் பணக்காரர்கள்
ஏழையின் பொருள் பறித்துக்,
குதிரைமேல் ஏறிக் கொண்டு,
கும்மாளம் போடுவார்கள்!
புதுப்பாடங் கற்றுக்கொள் நீ!
பூமியில் உழைப்பவர்க்கே,
எதுவுமே சொந்தமாகும்!
இதை என்றும் மறந்திடாதே!

ஈக்களின் வருத்தம்.

"சின்னவன் மனிதன்" என்றே
திட்டியே, வருந்தி ஈக்கள்
சென்றன எங்கோ! மீண்டும்
திரிந்தன தேனைச் சேர்க்க!
பின்னொரு கிளையைப் பார்த்துப்
பெருங்கூடு கட்டும் அவைகள்!
இன்னொரு மனிதன் அதையும்
இதுபோல்தான் கவர்ந்து செல்வான்!

தேனை எடுத்த மனிதன், விற்பதற்குக் கடைத்தெருவிற்குச் செல்கிருன். அங்கே, கோவில் பூசாரி காத்திருந்து, தேனை "அபிஷேகத்திற்கு" வாங்கிச் செல்லுகிருன்.

தேன் தனைக் கொள்ளை கொண்ட
மனிதனும் கடைக்குச் சென்ருன்!
கூன் தனை நிமிர்த்தி; ஓர் ஆள்,
"கொண்டுவா, தேனை" என்ருன்!
தேனைக் கொஞ்சம் விலைக்குத்
தந்து,பின் அவன்போய் விட்டான்!
கூனன் அத்தேனை எல்லாம்
கோவிலுக்கு எடுத்துச் சென்ருன்!

தேனீக்களை வளர்த்துத் தேன் சேகரித்தால்,
தேனீக்களுக்குத்துன்பம் கொடுக்காமலேயே,
நாம், நிறைய தேன் எடுக்கலாம்!—இதை
நீ தெரிந்து கொள்க!

ஏன் தேன் வீணாக வேண்டும்?
தேன்ருசி அறியாதார்க்குத்
தேன் தந்தால் மகிழ்ச்சி கொள்வார்!
தேனீக்களை வளர்த்துத்
தேன் சேகரித்தல் உண்டு!
-பின்,இதைத் தெரிந்துகொள் நீ!-
தேன் நமக் கெல்லோருக்கும்
கிடைக்கும் இவ்வாறு செய்தால்!

தேனை வீணாக்காதே!

தேன் இல்லாது போனால்
வைத்தியர் மருந்து செய்யார்!
தேன் அவர்க்குக் கிடைத்தால்
நல்லது, சனங்களுக்கு!
தேன், ஏன் வீணாக வேண்டும்?
கற்சிலைகள் தலையில்
தேனை ஏன் கொட்ட வேண்டும்?
தேன், தண்ணீர் அல்ல தம்பி!

தேனை விரும்பு.

தேன் என்றால் வாய் இனிக்கும்!
தேன் என்றால் சிறுவரெல்லாம்
மான்போலே துள்ளுவார்கள்!
மருந்துக்கு முக்கியம் தேன்!
தேனை,நீ விரும்பு தம்பி!
தேனை நீ அருந்தி வந்தால்
தேனாகும் உன் குரல்தான்;
நோய் யாவும் தீர்ந்து போகும்!

தேனீயைப்போல் சிறுவர்கள் உழையுங்கள்!

சிறுவர்காள், நீங்கள் எல்லாம்
சிறிதேனும் சோம்பி டாமல்
உறுதியாய்த் தேனீ போலே
உழைப்பீர்கள் ஒன்று சேர்ந்தே!
சிறுவர்காள், இன்னும் கேளீர்:
தேனீ போல் எங்கும் சென்றே
நறுமண மிக்க கல்வி
கற்றுமே தேர்வீர் நன்றே.

அடுத்த வெளியீடு

இளைஞர்கள்

விளையாட்டு

தி கிரேட் திராவிடன் பிரஸ், 2/269, தம்பு செட்டி தெரு,
ஜி. டி., சென்னை.